1981 ஜனவரி 31]

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தத் திட்டம் அமலுக்கு வந்தால் அதனை தற்போது வளர்ந்து வருகின்ற தூத்துக்குடி நகரத்திலே அமைப்பதற்கு அரசுமுன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலியில், தானே தூத்துக்குடியும் இருக்கிறது. வேண்டுமானல் அதுபற்றித் தனிக் கேள்விபோட்டுக் கொள்ளுங்கள்.

கோபி அரசு மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கை.

*வினா எண். 137 திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோபி நகராட்சியில் உள்ள அரசு மருத்துவ மனையில் படுக்கை வசதிகள் விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் பணியினை அரசு எப்போது துவங்கும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபியிலே இருக்கிற மருத்துவ மனையும், உடுமலைப் பேட்டையிலே இருக்கிற மருத்துவமனையும், திருப்பூரிலே இருக்கிற மருத்துவ மனையும் ஒரே ஆண்டிலே தான் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் மற்ற இரு மருத்துவமனைகளிலும் 200 படுக்கை வசதிகள் கொண்டவையாக மாற்றப்பட்ட பிறகும், கோபியிலே இருக்கிற மருத்துவ மனை மட்டும் 75 படுக்கைகள் கொண்டதாகவே இருக்கிறது. ஆகவே வருகிற நிதி ஆண்டிலாவது அதை விரிவுபடுத்துவதற்கான ஆலோசனையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதை விஸ்தரிப்பதற்கான எந்த விதமான திட்டமும் இல்லை என்றுதான் சொன்னேன். அடுத்த ஆண்டிற்காக, டைரக்டர் ஆப் மெடிகல் சர்விஸஸ் அண்டு பேமிலி பிளேனிங் அவர்கள், பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரையில், இப்போது இருக்கக் கூடிய 75 படுக்கைகளை 100 படுக்கைகளாக ஆக்க வேண்டும் என்றும், அவுட் பேஷண்ட் 635 பேர்கள் வருவதற்கான வசதிகள் இருப்பதை அதிகப்படியாக்கி விஸ்தரிக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். அதன்படி அடுத்த ஆண்டு அமுல் படுத்துவது குறித்து, டி.எம்.எஸ். அவர்களின் பரிந்துரை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோபி நகராட்சி மருத்துவ மனை 3 தாலுக்காக்களின் மத்தியிலே இருக்கக்கூடிய மருத்துவ மனை அதை 100 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ மனையாக மாற்றுவதற்கான திட்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். மக்களின் தேவையைக் கருதி, 150 படுக்கை வசதிகளாகவாவது மாற்றுவதற்கு அரசு மீண்டும் பரிசீலனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பொதுவாக தாலுக்கா ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளுக்கென்று, அவைகளை 100 படுக்கை வசதிகள் கொண்டதாக மாற்றுவது பற்றி பரிந்துரை செய்யப்பெற்றிருக்கிற திட்டம். தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனைகளில் 100 படுக்கைகளும், மாவட்ட மருத்துவ மனைகளில் 300 படுக்கை வசதிகளும் ஏற்படுத்த வேண்டும் என்பது பொதுவாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற திட்டம். இது அடுத்தஆண்டு அமுலுக்கு வருவது பற்றிதான் அரசு ஆராய்ந்துக் கொண்டிருக்கிறது.

திருநெல்வேலி நகரப் பேருந்துப் பணி.

*வினா எண். 138 திரு. இ. முத்துராமலிங்கம்; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி நகராட்சியில் இயங்கும் தனியார் நகரப் பேருந்துகளை அரசுடமை ஆக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின்மீது டெல்லி உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இ. முத்துராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் தனியார் பேருந்துகள் எத்தனை வழித் தடங்களில் ஓடுகின்றன? அது போன்று அரசு பேருந்துகள் எத்தனை வழித்தடங்களில் ஓடுகின்றன என்பது பற்றிய தகவல் இருந்தால் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அர்களே, எந்தெந்தப் பேருந்துகள் எவ்வளவு ஓடுகின்றன என்கிற குறிப்பு என்னிடத்தில் இல்வல.